அமர்வு வழக்கு எண்.**195/2017**

**06-02-2026**

அ.சா.**1** ரசீத்தா

**(**சாட்சி **CMP.No.13/2025, 14/2025** மற்றும் **15/2025** மனுக்களின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள்**).**

**(1** வது எதிரி அக்ரம் ஜிந்தா**, 2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம்**, 3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத்**, 5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர்**, 6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் காணொலி மூலம் ஆஜர் படுத்தப்பட்டார்கள் **)**

**1,3** மற்றும் **6** எதிரிகள் கூடுதல் குறுக்கு விசாரணை அனுமதியுடன் **:-**

பொதுவாக முஸ்லீம்களுக்கு வாழ்க்கை முறையானது குரான்படியும்**,** ஹதீஸ் முறைப்படியும்தான் அமைந்திருக்கிறது என்று சொன்னால் சரிதான்**.** முஸ்லீம்களின் கடமைகள் குரானிலும்**,** ஹதீஸிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்**.** அதன்படி முஸ்லீம்களுக்கு கலீமா சொல்லுதல்**,** தொழுகை**,** நோன்பு**,** ஜக்காத்**,** ஹஜ் பயணம் ஆக ஐந்து கடமைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்**.** ஒரு ஆண் மகன் முஸ்லீம் ஆகவேண்டுமென்றால் கலீமா சொல்லி**,** சுன்னத் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான்**.** ஆனால் பெண்களுக்கு கலீமா மட்டும்தான் சொல்வார்கள் என்றால் சரிதான்**.** நானும்**,** எனது கணவரும் முறைப்படி முஸ்லீம் ஆனவர்கள் என்று சொன்னால் சரிதான்**.** தொழுகையில் ஐந்து நேர தொழுகை உண்டு என்று சொன்னால் சரிதான்**.** அதை தவிர ஜூம்மா என்ற சிறப்பு தொழுகையும் உண்டு என்று சொன்னால் சரிதான்**.** மேற்சொன்ன ஆறு தொழுகைகளிலும் ஒன்று தவறினாலும் அதை அடுத்த முறை சேர்த்து செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான்**.** பள்ளிவாசல் எப்படி இருக்கவேண்டும்**,** யார் நிர்வகிக்க வேண்டும்**,** அவர்களுக்கு என்ன அதிகாரம்

உள்ளது என்று குரானிலும், ஹதீசிலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பள்ளி வாசலில் ஜமாத் என்ற ஒரு கட்மைப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். பள்ளி வாசலில் இமாம் என்ற மார்க தலைவரும் இருப்பார் என்று சொன்னால் சரிதான். ஆண்கள் எல்லாம் பள்ளிவாசல் சென்று தொழுகை நடத்தவேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தொழுகை நடத்தும்போது அசரத்தும் அங்கு இருப்பார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன கடமைகளிலிருந்து ஒருவர் தவறினால் பள்ளிவாசலில் உள்ள கமிட்டி அவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. பத்துவா என்றால் எனக்கு சரியாக தெரியாது. ஆனால் சாபம் என்று கேள்விப்பட்டுள்ளேன். முஸ்லீம் மார்க்கத்தை குறித்து தவறாக பேசினாலோ அல்லது தவறாக பிரச்சாரம் செய்தாலோ மார்க்கத்தை விட்டு தவறி சென்றாலோ பத்துவா அறிவிக்கப்படும் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. பத்துவாவை இமாம்தான் அறிவிப்பார் என்று சொன்னால், நான் அதை பற்றி கேள்விப்படவில்லை. எனது திருமணத்திற்கு பின்னர் ஒருமுறைதான் அவர் பள்ளிவாசல் தொழுகைக்காக சென்றுள்ளார். வேறு எப்பொழுதும் அவர் சென்றதில்லை. எனது கணவர் ரம்ஜானுக்காக நோன்பு இருப்பதில்லை. பக்ரித் கொண்டாடுவோம். அவரும் கொண்டாடுவார். ஜகாத் என்பது வருமானத்தில் 2 ½ சதவீகிதத்தை தானம் கொடுப்பது என்று சொன்னால் சரிதான். உளமாக்கள் ஒவ்வொரு வீடாக சென்று களிமா சொல்வார்கள் என்று சொன்னால், எங்கள் வீட்டிற்கு யாரும் வர மாட்டார்கள். அப்படி வருபவர்களுக்கு தானம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் அவ்வாறு ஜகாத் எதுவும் யாருக்கும் கொடுப்பதில்லை என்று சொன்னால், போதிய வருமானம் இல்லாததால் நாங்கள் கொடுப்பதில்லை. எனது கணவர் இறக்கும்வரை அனைத்து

கடமைகளையும் செய்து முஸ்லீமாகத்தான் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால், அவர் முஸ்லீமாக இருந்தார். ஆனால் மேற்சொன்ன எந்த கடமைகளையும் அவர் செய்ததில்லை. கடமைகளிலிருந்து அவர் தவறியதால் பள்ளிவாசலில் இருந்து அவர்மீது நடவடிக்கை எடுக்க சொல்லி எந்த அறிவிப்பும் வந்ததில்லை. எனது முதல் சாட்சியத்தில் நான் முகமது நபி அவர்களுக்கு எதிராக எனது கணவர் விமர்சனம் செய்வார் என்று கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின்போதோ, எனது புகாரிலோ நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால், போலீசாரிடம் கூறினேன். ஆனால், எனது கணவரை கொலை செய்ததால் புகார் கொடுக்கவேண்டும் என்று இருந்ததைதவிர வேறு எதுவும் எனக்கு தோன்றவில்லை. முஸ்லீம் அல்லாதவர்களை காபிர் என்று குரானிலும், ஹதீசிலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த காபீர்கள் என்ன தெய்வங்களை வணங்குவார்கள் என்று குரானிலும், ஹதீசிலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வேறு மதத்தவர்களை காபீர்கள் என்று சொல்லியுள்ளார்கள். சிலை வழிபாடு கொண்டவர்கள் காபீர்கள் என்று சொன்னால் சரிதான். இந்துக்கள் சிலை வழிபாடு செய்பவர்கள் என்று சொன்னால், இருக்கலாம். திராவிட இயக்கம் சொல்லுகின்ற கடவுள் மறுப்பு என்பது இந்துக்களின் கடவுளையும் சேர்த்துதான் என்று சொன்னால், மூட நம்பிக்கைகளைதான் அந்த இயக்கத்தில் எதிர்த்து வருகிறார்கள். எல்லா கடவுளும் ஒன்றுதான். எனது கணவர் இந்துமத கடவுள்களை பற்றியும், சிறிஸ்துவ மத கடவுளை பற்றியும்தான் பேசி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் எங்கள் மதமான முஸ்லீம் கொள்கைகளைதான் எதிர்த்து வந்தார். நான் கூறுவது தவறு என்றும், எனது கணவர் ஒருபொழுதும் முஸ்லீம் கொள்கைகளை பற்றி தவறாக பேசியதில்லை, பதிவுகள் போட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று எனது கணவர் காலையில் வீட்டில் சாப்பிட்டார். அவர்

எப்பொழுதும் **9** அல்லது **10** மணிக்கு சாப்பிடுவார்**.** அதன் பின் கடைக்கு சென்று விடுவார்**.** சம்பவத்தன்று மதியம் அவர் வீட்டிற்கு வந்துதான் சாப்பிட்டார்**.** மதியம் சுமார் **2** மணி இருக்கலாம்**.** எனது கணவர் இந்து விரோத சக்தியாக மட்டும்தான் இருந்தார் என்றும்**,** நான் முதல் சாட்சியத்தில் கூறியுள்ளதுபோல் எதுவும் நடந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல**.** நான் கூறியதுபோல் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல**.** சம்பவம் நடந்த பின்னர் இந்து முன்னனி கட்சியினரும்**,** ஜமாத்தாரும்**,** போலீசாரும் இணைந்து இந்த வழக்கை ஜோடித்து எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல**.**

<u>**5** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதலில் எந்த தேதியில் வந்து இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்று ஞாபகமில்லை. புகாரை எனது மாமியாரின் உறவினர் அபுதாஹீர் என்பவர் எழுதினார். எனது புகாரை பி.1 காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். எனக்கு ஆய்வாளர், உதவி காவல் ஆய்வாளர் போன்ற வித்தியாசங்கள் எதுவும் தெரியாது. காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். புகாரை வாங்கிய போலீசார் என்னை படித்து பார்த்து கையொப்பம் போட சொன்னார்கள். புகாரை பெற்று கொண்ட பின்னர் எங்களுடன் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். காவல் நிலையத்தில் சுமார் ½ மணி நேரம் இருந்திருப்பேன். அந்த ½ மணி நேரத்தில் நான் கொடுத்த புகாரின் நகலை என்னிடம் கொடுத்தார்களா என்று நினைவில்லை. புகாரை பெற்று கொண்ட பின்னர் என்ன செய்தார் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் கொடுத்த புகாரை தட்டச்சு செய்து அதன் நகலை எனக்கு காவல் நிலையத்தில் எனக்கு கொடுத்தார்களா என்று எனக்கு நினைவில்லை. எனது முதல்

விசாரணையில் நான் கூறியுள்ள விவரங்கள் கற்பனையானவைகள் என்றும், போலீசாரிடம் கூறாத விவரங்களை நான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின்பொழுது எனது வயது 31 இருக்கலாம் என்று சொன்னால் சரிதான். நான் 1986 ல் பிறந்தேன். 1997 லிருந்து தற்பொழுது வரை கோயமுத்தூரில்தான் இருக்கிறேன். 1997 வருடம் நவம்பரில் இரு வகுப்பினரிடையே கலவரம் நடந்து 18 இஸ்லாமியர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை நான் கேள்விப்பட்டுள்ளேன். 1998 பிப்ரவரி 14 முதல் 17 வரை கோயமுத்தூரில் தொடர் குண்டு வெடிப்புகள் நடந்து 57 பேர் இறந்து போனார்கள் என்று சொன்னால், நான் அதை கேள்விப்பட்டுள்ளேன். அப்போது நான் 6 வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். 2016 ல் சசிகுமார் என்பவர் கொலை செய்யப்பட்டு அதை தொடர்ந்து சுமார் 200 வழக்குகள் இஸ்லாமியர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட விவரத்தினை நான் கேள்விப்பட்டுள்ளேன். அந்த சமயத்தில் எனது கணவரை குண்டாஸ் சட்டத்தில் கைது செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். சுமார் மூன்று மாதங்கள் அவர் அப்பொழுது சிறையில் இருந்தார். அப்பொழுது திராவிட விடுதலை கழகத்தை சேர்ந்த கொளத்தூர் மணி என்பவர் ஆட்கொணர்வு மனு செய்து எனது கணவரை வெளியே கொண்டு வந்தார் என்று சொன்னால் சரிதான்.

போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை மூன்று முறை விசாரித்தார்கள். புகாரை கொடுத்த பின்னர் பி.1 பஜார் போலீசார் புகார் கொடுத்த அன்றும், மறுநாள் வீட்டிற்கு எனது மாமியாரையும் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை. புகாரை பெற்று யார் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எவ்வளவு நேரம் என்னை போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. சுமார் ½ மணி நேரம் இருக்கலாம். என்னை விசாரித்து

சேகரித்த விவரங்களை வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

கேள்வி - எனக்கு FIR என்றால் என்ன என்று தெரியுமா?

பதில் - முதல் விசாரணையை பெற்றுக் கொள்வது.

புகாரை கொடுத்த பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற பின்னர் மீண்டும் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை.

எனக்கு பி.1 பஜார் காவல்நிலைய போலீசாருக்கும்,சி.பி.சி.ஐ.டி போலீசாருக்கும் உள்ள வேறுபாடு தெரியும். சுமார் ஒரு மாதம் கழித்து சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரிக்க அழைத்து சென்றார்கள். வீட்டிலிருந்து அழைத்து சென்றார்கள். யார் என்னை அழைத்து சென்றார்கள் என்று தற்போது எனக்கு தெரியாது. என்னை எந்த நேரத்தில் அழைத்து சென்றார்கள் என்று தற்பொழுது நினைவில்லை. சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் சுமார் இரண்டு மணி நேரம் இருந்திருப்பேன். ஜாபர் அலியுடன் எனது கணவர் கூட்டாக வியாபாரம் செய்தார் என்று கூறுவதற்கு ஆதாரமாக போலீசாரிடம் நான் ஆவண ஆதாரங்கள் எதையும் கொடுக்கவில்லை. இந்து முன்னனி தலைவர் சசிகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனது கணவரை கைது செய்தது தொடர்பாக ஆவண விவரங்களை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால், ஆவணங்கள் எதையும் நான் கொடுக்கவில்லை. அந்த சமயத்தில் எந்த தேதியில் ஜாபர்அலி எங்கள் வீட்டிற்கு வந்தார் என்று எனக்கு தேதி நினைவில்லை. எனது கணவர் இறப்பதற்கு முன்னர் ஜாபர் அலிக்கு எதிராக காவல் நிலையத்தில் நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை. எனது கணவரின் செல்போனை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. எனது கணவரை செல்போனில் மிரட்டியதாக அவ்வாறு மிரட்டிய நபர்களின்மீது நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று போலீசார் விசாரணையில்

குறிப்பிட்டுள்ளேன். சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரிக்கும்பொழுது நான் கூறினேன். சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை சுமார் ½ மணி நேரம் விசாரித்திருப்பார்கள். விசாரித்தவர் துணை காவல் கண்காணிப்பாளர் ஆவார். நான் சொன்ன விவரங்களை அவர்கள் ரெக்கார்டு செய்தார்கள். மைக் வைத்து ரெக்கார்டு செய்து கொண்டார்கள். அவ்வாறு ரெக்கார்டு செய்த விவரத்தை எனக்கு மீண்டும் போட்டு கேட்க வைத்தார்களா என்று தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. திராவிட இயக்கத்தில் எனது கணவர் உறுப்பினராகவோ, அல்லது பின் தொடர்பவராகவோ இருந்தார் என்று கூறுவதற்கு ஆதாரமாக எந்த ஒரு ஆவணத்தையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. நான் கூறியது போல் புகாரை அபுதாஹீர் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வெட்டுப்பட்டு கிடப்பதாக பசூல்ரகுமான் என்பவர் எங்களிடம் தெரிவித்தார். சம்பவ இடத்தில் அன்றைய தினம் நான் சென்ற நேரத்தில் சுமார் எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற சமயத்தில் போலீசார்கள் இருந்தார்கள், எத்தனைபேர் என்று எனக்கு நினைவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் இந்த வழக்கின் ஒரு எதிரி அன்சாத் அவராகவே காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். எனது கணவர் இறந்த நான்கு நாட்கள் கழித்து சம்சுதீனும், சதாமும் சரண் அடைந்தார்கள். பின்னர் முனாப், ஜாபர், அக்ரம்ஜிந்தா மூவரையும் கைது செய்தார்கள். பின்னர் ஜாபர்அலி பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று எனது தம்பி கூறி நான் கேள்விப்பட்டேன். பின்னர் விசாரணையை முடித்து குற்ற பத்திரிக்கையை எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் கொளத்தூர் மணி சாட்சியாக இருக்கிறார் என்று எனக்கு தெரியும். இந்த வழக்கில் நேருதாஸ் என்பவர் ஒரு சாட்சியாக இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். நேருதாஸ் எனது

கணவரின் நண்பர். எனது கணவர் குண்டாஸில் இருந்த சமயத்தில் நேருதாஸிடம்தான் அதை பற்றி கூறினோம். அதன் அடிப்படையில் அவரையும் எனக்கு தெரியும். அவர்தான் கொளத்தூர் மணியிடம் அதை பற்றி கூறினார். அவர் கூறிதான் கொளத்தூர் மணிக்கு எனது கணவர் குண்டாஸில் உள்ளே இருக்கும் விவரம் தெரியும் என்றால் சரிதான். நேருதாஸ் திராவிடர் விடுதலை கழகத்தில் கோயமுத்தூர் மாவட்ட அமைப்பாளராக இருக்கிறார். நேருதாஸை இன்றிலிருந்து சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு பார்த்தேன். புதிய வீட்டிற்கு மாறினோம். அப்பொழுது பால் காய்ச்சும்பொழுது அவரும் இருந்தார். நான் அழைத்ததன்பேரில்தான் அவர் வந்தார். ஜாபர் அலி பிணையில் வந்த பின்னர் அவரது ஜாமீன் ரத்து செய்யப்பட்டு அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். நேருதாஸ் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் ஜாபர் அலியின் பிணை ரத்து செய்யப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார் என்ற விவரம் நேருதாஸ் கூறி எனக்கு தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. அவர் மீண்டும் ஜாமீன் மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியாது. ஜாபர் அலி உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்த விவரம் நேருதாஸ் கூறி எனக்கு தெரியும். அவருக்கு ஜாமீன்கொடுக்க கூடாது என்று நானும்,நேருதாஸும் உயர்நீதிமன்றத்தில் இண்டர்வீனர் பெட்டிசன் தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரிதான். சென்னையில் வழக்கறிஞரை பார்ப்பதற்கு நேருதாஸுடன் நான் செல்லவில்லை. நேருதாஸின் தூண்டுதலின்பேரில்தான் இந்த வழக்கில் ஆறு எதிரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நேருதாஸின் தூண்டுதலின்பேரில்தான் எதிரிகளுக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1997 சம்பவம் மற்றும் 1998 சம்பவத்தின் தொடர்ச்சியாக நேருதாஸின் தூண்டுதலின்பேரில் எதிரிகளின்மீது

தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக பள்ளிவாசலில் ஜமாத் என்ற ஒரு அமைப்பு இருக்கும் என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஜமாத்தில் ஒரு புகார் அளிக்கப்பட்டால் அதில் தொடர்புடையவர்களை அழைத்து விசாரிப்பார்கள் என்று சொன்னால் சரிதான். நான் எனது கணவரை ஜாபர் அலி மிரட்டுகிறார் என்று ஜமாத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. காரணம் எனது கணவரும், அவரும் நண்பராக இருந்ததால் அப்பொழுது கொடுக்கவில்லை. மூன்றாம் நபர்கள் யாரேனும் மிரட்டியிருந்தால் நான் ஜமாத்தில் புகார் கொடுத்திருப்பேன். ஆனால் எதிரிகள் அனைவருமே எனது கணவரது நண்பர்கள் என்பதால் நான் அப்பொழுது புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது கணவரை ஜாபர் அலி கொலை செய்யவில்லை என்றும், உண்மை குற்றவாளிகள் வேறு நபர்கள் என்று சொன்னால், யார் கொலை செய்தார்கள் என்று கடவுளுக்காத்தான் தெரியும். இந்த வழக்கில் உள்ள மற்ற எதிரிகளும் இந்த கொலையில் சம்மந்தபடாதவர்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது கணவருக்கு பல எதிரிகள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவருக்கு வேறு யாரும் எதிரிகள் இல்லை. நான் போலீசில் புகாரே கொடுக்கவில்லை என்றும், யாரோ எழுதி கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான்தான் புகாரினை கொடுத்தேன். என்னை போலீசார் விசாரிக்கவுமில்லை, எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றும்,அனைத்து ஆவணங்களும் போலீசாரால் ஜோடிக்கப்பட்டு எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதால் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் ஜாபர் அலிக்கும் வர்த்தக ரீதியாக நடந்த நிகழ்வுகளுக்கு பழி

தீர்க்கும் விதமாக அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கும் வேறு நபர்களுக்கும் வியாபார ரீதியாக முன்பகை இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அவர் வியாபார காரணங்களுக்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ கொலை செய்யப்பட்டார் என்றும், நான் கூறிய காரணங்களுக்காக அவர் கொலை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் கொலை செய்யப்பட்டது சம்மந்தமாக வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் பாதிப்படையக் கூடாது என்பதால் எங்கள் சமூகத்தை சேர்ந்த நபர்கள்மீது தவறாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரை கொளத்தூர் மணி குண்டாஸ் வழக்கிலிருந்து வெளியில் எடுத்தார் என்று இந்த வழக்கிற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கௌத்தூர் மணி இந்த வழக்கில் சாட்சியாக உள்ள விவரத்தை என்னிடம் அவர் நேரில் கூறினாரா என்றால், கூறியுள்ளார். இந்த வழக்கிற்கும், **5** ஆம் எதிரி ஜாபர் அலிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் மறு கூடுதல் குறுக்கு விசாரணை</u>

**2** மற்றும் **4** எதிரிகள் மேலே உள்ள இரண்டு கூடுதல் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்**/**ரசீத்தா**,**

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.